

சென்னை சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகக் கூட்டரங்கில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் நரிக்குறவர் நல வாரிய கூட்டம் 23.08.2024 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, மிக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், ஆதிதிராவிடர் நலத் துறை இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு இணை செயலாளர் திருமதி ச.வளர்மதி, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணாதுரை, அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றியம் தளபதிசமுத்திரம் ஊராட்சி கண்டிகைபேரி கிராமத்தில் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனை விளக்க கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன் வழிகாட்டுதலின்படி ஒன்றிய செயலாளர் சுடலைகண்ணு தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் நெல்லை மணி, ஒன்றிய அவை தலைவர் சுப்பிரமணியன் ஒன்றியக்குழு துணைத் தலைவர் இசக்கி பாண்டி,மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் வாசுதேவன் பண்ணையார்,கிளைக் கழகச் செயலாளர் குமார், தளபதி சமுத்திரம் ஊராட்சி துணைத் தலைவர் அருள் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,கழகத்தினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, ஆக. 25-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருச்செந்தூர், திருவை குண்டம், ஒட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகளில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுமாறு மாவட்டச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2025 ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஆகஸ்ட் 20-ம் தேதி முதல் அக்டோபர் 18-ம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர்பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை மறு சீரமைத்தது வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29-ம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் 28-ம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. (வாக்குச்சாவடி வாரியாக சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்) 2025-ம் ஆண்டு ஜனவரி 6-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

ஆகவே அக்டோபர் 29-ம் தேதி முதல் நவம்பர் 28-ம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம்.

அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களிலும் சேர்க்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன்கூடிய 10 அல்லது 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை கொடுக்கலாம். 25 வயதிற்கு கீழ் உள்ள வீண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதற்கான இணையதள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி, உள்ளிட்ட ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் (BLA-2) இணைந்து மேற்கொண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் தீவிரமாக ஈடுபட்டு நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக நடைபெறுகிறது!

# தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தேனி, ஆக. 25-

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களின் தலைமையில் 16.08.2024-ம் நாள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அதனைத் தொடர்ந்து தேனி தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக கீழ்க்கண்ட நாட்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்டக் கழக செயலாளரான எனது (கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.ஏ., எம்.எல்.ஏ.) மேற்பார்வையிலும், அந்தந்த பகுதிகளில் உள்ள மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளின் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடுகளை செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நாள் நேரம் இடம் ஒன்றிய, நகர, பேரூர் விவரம் வருமாறு:-**

25.08.2024 -மாலை 5.00 - சி.என்.ஆர் மஹால் கம்பம் - கம்பம் நகரம் வடக்கு & தெற்கு

25.08.2024 - மாலை 6.00 - கே.எஸ்.மஹால் கூடலூர் - கூடலூர் நகரம்

26.08.2024 - காலை10.00 - விஜய லட்சுமி மஹால் உத்தமபாளையம் - உத்தமபாளையம் கிழக்கு ஒன்றியம் & உத்தமபாளையம் பேரூர்

26.08.2024 - காலை 11.00 - ஒக்கலிகர் மண்டபம் கோம்பை -கோம்பை பேரூர்

26.08.2024 - மாலை 4.00 - காளியம்மன் கோவில் மண்டபம், பண்ணைப்புரம் -உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் & பண்ணைப்புரம் பேரூர்

26.08.2024 - மாலை 5.00 - வ.உ.சி மண்டபம் தேவாரம் -தேவாரம் பேரூர்

27.08.2024- காலை 11.00- கவிப்பிரியா மஹால் சின்னமனூர் - சின்னமனூர் கிழக்கு ஒன்றியம்

27.08.2024 - மாலை 5.00 - கே.கே.எஸ். மஹால் கே.கே. பட்டி - கம்பம் ஒன்றியம் - ஹைவேவிஸ், கே.கே.பட்டி பேரூர்

27.07.2024 - மாலை 6.00 - பேரூராட்சி மண்டபம் புதுப்பட்டி -க. புதுப்பட்டி, அனுமந்தன் பட்டி பேரூர்

28.08.2024 - காலை 10.00 - சிலம்பம் மஹால் ஆண்டிபட்டி - ஆண்டிபட்டி கிழக்கு, மேற்கு ஒன்றியம், ஆண்டிபட்டி பேரூர்

29.08.2024 - காலை 10.00 - பத்ரகாளியம்மன் கோவில் மண்டபம், கடமலை -கடமலை - மயிலை வடக்கு & தெற்கு ஒன்றியம்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நெல்லை மாநகர மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் மேலப்பாளையம் பகுதி மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மேரி உலகராஜ், மகளிர் அணி தலைவர் ஜோஸ் வனிதா,மகளிர் அணி அமைப்பாளர் சௌந்திரம், மகளிர் தொண்டரணி தலைவர் பத்மா,மகளிர் அணி துணை அமைப்பாளர் பிந்து செய்யது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம் (ஆறாவது பட்டியல்)

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் சேலம், ஈரோடு, திருச்சி கிழக்கு, தூத்துக்குடி ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேலம் மத்திய மாவட்டம்**
**சேலம் மாநகரம்**

**அமைப்பாளர் :** எம். மணிகண்டன், எம்.பி.ஏ., நெ.15, டி29, கண்ணன் தெரு, சேலம் – 1.

**துணை அமைப்பாளர்கள் :** ப. இளஞ்செழியன், எம்.காம்., சி.ஏ., நெ.318, கோமுட்டிக்காடு, நரசோதிப்பட்டி, சேலம். எஸ். சுந்தர், டி.எம்.இ., நெ.37, புது தெரு - 2, பொன்னம்மாபேட்டை, சேலம். அழகாபுரம் ஜெ. மோகன், பி.காம்., நெ.2/91பி, பாவை வட்டம், சேலத்தாம்பட்டி, சூரமங்கலம், சேலம். டி. இந்துஜா, பி.டெக்., நெ.133/134, வாசக சாலை தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம். ஏ.சீனிவாசன், பி.ஏ., நெ.91/ஏ, கிழக்கு இரயில்வே காலனி, ஜங்சன், சேலம்.

**ஈரோடு தெற்கு மாவட்டம்**
**ஈரோடு மாநகரம்**

**அமைப்பாளர் :** என். ஸ்ரீதர், டி.ஐ.டி., ஏ.பி.என். கார்டன், பெரிய செட்டிபாளையம், புதூர், ஈரோடு – 2.

**துணை அமைப்பாளர்கள் :** ஆர். நல்லசிவம் (எ) சிவா, பி.காம்., சி.ஏ., பொய்யரிக்கரை வீதி, பயர் சர்வீஸ் பின்புறம், ஈரோடு 1. எம். மணிகண்டன் (எ) சிவா, டி.எம்.இ., நெ.36/1, சின்னமுத்து மெயின் வீதி, இடையன்காட்டு வலசு, ஈரோடு 638 011. கு. தனராஜா, பி.இ., நெ.13, வேலப்பக்கவுண்டன் வலசு, வில்லரசம் பட்டி, ஈரோடு – 7. பா. சத்தியவதி, எம்.எஸ்.சி. பி.எட்., கொல்லம்பாளையம், ஈரோடு. பி. விஜயகுமார், எம்.ஏ., பி.எல்., நெ.70/10பி, டவர்லைன் காலனி, சரோஜினி நகர், ஈரோடு 11.

**திருச்சி தெற்கு மாவட்டம்**
**திருச்சி கிழக்கு மாநகரம்**

**அமைப்பாளர் :** ஏ. முகமது அசாருதீன், டி.சி.இ., நெ.33/ஏ, ஏ.எம்.ஏ இல்லம், வ.உ.சி. நகர்,3வது நகர், திருவெறும்பூர், திருச்சி – 13.

**துணை அமைப்பாளர்கள் :** பி. செந்தாமரை கண்ணன், டி.சி.இ., நெ.168எச்/1, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி01. பி. கீதா, எம்.சி.ஏ., நெ.62ஏ/2, இலுப்பூர் ரோடு, கல்லுக்குழி, திருச்சி - 20. பி. மணிகண்டன், எம்.பி.ஏ., நெ.6/27, சங்கர் நாயக்கர் தெரு, கல்யாணசுந்தரபுரம், மதுரை ரோடு, திருச்சி – 08. எம். சிபிராஜ், எம்.ஏ., நெ.3/284, வடக்கு பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு காட்டூர், திருச்சி - 19. க. சந்திரசேகர், எம்.பி.ஏ., நெ.23, நரசிம்ம நாயுடு தெரு, மரக்கடை, திருச்சி – 08.

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**
**தூத்துக்குடி மாநகரம்**

**அமைப்பாளர் :** பொ. வினோத் கண்ணன், டி.எச்.எம்., நெ.15, நாடார் தெரு, தூத்துக்குடி – 1.

**துணை அமைப்பாளர்கள் :** எஸ். கந்தசாமி, பி.இ., 6.107ஜெ/1ஜி/18, டி.எம்.பி. காலனி, 5வது தெரு, தூத்துக்குடி - 8. செ. கார்த்திகேயன், டி.சி.இ., நெ.3பி/63, பிரையண்ட் நகர் 13வது தெரு, பாரதி நகர், தூத்துக்குடி - 8. ஏ. அர்ஜீன், பி.இ., நெ.1இ/1, சுந்தரவேல்புரம் 2ம் தெரு, தூத்துக்குடி - 2. சத்யா ஈஸ்வரி, பி.எஸ்.சி., நெ.3ஏ/363, இந்திரா நகர், எப்.சி.ஐ. குடோன் எதிரில், தூத்துக்குடி - 8. வே. பாலமுருகன், பி.ஏ., நெ.66/ஏ, போல்டன்புரம் 2ம் தெரு, தூத்துக்குடி - 3.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 24.08.2024

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



நெல்லை கிழக்கு மாவட்டம் கூடங்குளத்தில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன் வழிகாட்டுதலின்படி கூடங்குளம் ஊராட்சி எஸ். எஸ்.புரம் கிராமத்தில் ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில பேச்சாளர் வேங்கை சந்திரசேகர், ஒன்றிய அவைத்தலைவர் ராமையா,மாவட்ட பிரதிநிதிகள் கோவிந்தன்,சமுகை முரளி, வழக்கறிஞர் சந்திரசேகர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜான்சி ரூபா,ஒன்றிய கவுன்சிலர்கள் நடராஜன் மௌலின்,இசக்கிபாவு ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூடங்குளம் வின்சி மணியரசு, சௌந்தர பாண்டியபுரம் முருகேசன்,எஸ். எஸ்.புரம் கிளைச் செயலாளர் பெரியசாமி உள்பட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை. கலியமூர்த்தி
### ஆகஸ்ட் 25 (1989)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சி.இளங்கோவன் (எ) ஏழுமலை
### ஆகஸ்ட் 25 (2016)



ஒருங்கிணைந்த செங்கை–அண்ணா மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

இவர், அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, துறையின் பல்வேறு நடவடிக்கைகளையும் மீறி கழகம் அறிவித்த ஆர்ப்பாட்டம், போராட்டங்களில் பங்கு கொண்டார்.

இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, சைக்கிளிலேயே பயணம் செய்து கழகத்தை வளர்த்ததுடன், இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**